DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 64/2024** |
| Deposition of Witness for | : PW 6 |
| Name | : டாக்டர்.வெள்ளச்சாமி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 22.01.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 22nd January 2026.

**1ம் எதிரி ஆஜர். 2,3 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதிமன்றம் தானாக சாட்சி அளிக்கும் சாட்சியத்தை பதிவு செய்கிறது.**

முதல்விசாரணை:

நான் தற்போது சிவகங்கை மாவட்டத்தில் மருத்துவபணிகள் காசநோய் பிரிவில் துணை இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.06.2016 அன்று நான் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் பணியிலிருந்த போது காலை 11.40 மணிக்கு பூரணம் என்பவரை அவரது கணவர் சண்முகையா என்பவர் சிகிச்சைக்காக என்னிடம் அழைத்து வந்தார். பூரணம் தன்னை அடையாளம் தெரிந்த 5 நபர்கள் (3 பெண்கள், 2 ஆண்கள்) தனது வீட்டில் காலை 9 மணியளவில் தாக்கியதாக என்னிடம் கூறினார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் சுயநினைவுடன் காணப்பட்டார். அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. அவரது பல்லில் அடிபட்டிருந்தது.

சங்கரன்கோவில் அரசு மருத்துவமனை பல்மருத்துவரிடம் கருத்து கேட்கப்பட்டபோது அவர் பூரணத்தின் மேல்தாடையில் உள்ள இரண்டாவது பல்லில் அசைவு உள்ளதாக தெரிவித்தார். அவரது கருத்தின்படி மேற்கூறிய காயம் கொடுங்காயம் என சான்று அளித்தேன். பூரணத்தின் விபத்து பதிவேட்டுடன் கூடிய **காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

பூரணம் என்னிடம் சிகிச்சைக்கு வந்த தன்னை 3 பெண்கள் மற்றும் 2 ஆண் நபர்கள் தாக்கியதாக கூறினார் என அவரது விபத்து பதிவேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் கூறிய காயம் ஒரு நபர் கரடுமுரடான பகுதியில் மோதினால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

**மறுவிசாரணை இல்லை.**